2019 ஜூலை 18]

பகுதியிலிருக்கிற 10 ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் விவசாயத் தொழிலை நம்பிதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்பகுதி மக்களுடைய நலன் கருதி, தாளவாடி பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதியில் ஏராளமான அரசு புறம்போக்கு நிலங்கள் இருப்பதாலும், தாளவாடி பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

140—

புதிய பேருந்து

***4934—திரு. அ. ராமு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் முதல் கோத்தகிரி வரை பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி, பெல்லட்டிமட்டம், அளக்கரை, பெப்பேன், சேலாடா மற்றும் அரவேனு வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குன்னூர்–கோத்தகிரி வழித்தடத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியார் சிற்றுந்துகள் மக்களின் தேவைக்கேற்ப இயக்கப்படுகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் போதுமான இணைப்புப் பேருந்துகளும் உள்ளன. எனவே, இவ்வழித்தடத்தில் புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

குன்னூர் முதல் கோத்தகிரி வரை அரவேனு, சேலாடா, பெப்பேன், அளக்கரை, பெல்லட்டிமட்டம், பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி, சிம்ஸ் பார்க், குன்னூர் ஆகிய வழித்தடங்கள் குன்னூர் நகராட்சி, கோத்தகிரி பேரூராட்சி, ஜக்கனாரை ஊராட்சி, எடப்பள்ளி ஊராட்சி, வண்டிசோலை ஊராட்சி ஆகியவற்றை உள்ளடக்கியது. அந்த வழித்தடத்தில் ஏறத்தாழ 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் விவசாயிகள் உள்ளனர், கூலித் தொழிலாளர்களும் செல்லக்கூடிய வழி. அந்த வழித்தடத்திலே ஒரு பேருந்தை இயக்கினால், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு நிச்சயமாக வருவாய் ஈட்டித் தரும் என்பதிலே எந்த சந்தேகமும் இல்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த வழித்தடத்தில் ஒரு பேருந்தை இயக்கினால் நன்றாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர்—கோத்தகிரி வழித்தடம் 22.8 கி.மீ. தூரம் உள்ளதாகும். இவ்வழித்தடத்தில், பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி வழியாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குன்னூரிலிருந்து பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி, பெல்லட்டிமட்டம் வழியாக அளக்கரை வரையில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தும், கோத்தகிரியிலிருந்து அரவேனு, சேலாடா, பெப்பேன் வழியாக அளக்கரை வரை போதுமான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து மற்றும் தனியார் சிற்றுந்துகள் மக்களின் தேவைக்கேற்ப இயக்கப்படுகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் போதுமான இணைப்புப் பேருந்துகளும்*

2019 ஜூலை 18]

இயக்கப்படுகின்றன. எனவே, இவ்வழித்தடத்தில் புதிய பேருந்துகளை இயக்குவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, தேவையிருப்பின் அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

முற்பகல் 11–15

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 'பரிசீலிக்கப்படும்' என்று சொன்னதற்கு அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முழுமையாக இருளர், குறும்பர் பழங்குடியின, ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய தெங்குமரஹடா ஊராட்சியில் 6 கிராமங்களையும் சேர்த்து சுமார் 3,000 மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியிலே ஒரே ஒரு அரசுப் பேருந்து மட்டும் கோத்தகிரியிலிருந்து இயக்கப்படுகிறது. தெங்குமரஹடா ஊராட்சி, குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டது. ஆனால், அவர்கள் பவானிசாகருக்குச் சென்றுதான் தெங்குமரஹடாவுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அங்கு ஒரே ஒரு அரசுப் பேருந்து மட்டும்தான் இயக்கப்படுகிறது. அதற்கு* opposite side-*ல் இன்னொரு பேருந்து இயக்கினால், நிச்சயமாக அங்கு வாழக்கூடிய விவசாயிகள் அவர்களுடைய பொருட்களை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாகவும், பள்ளிக் குழந்தைகள் பகல் நேரத்திலே வந்து செல்வதற்கு ஏதுவாகவும் இருக்கும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு* opposite bus *இயக்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற வழித்தடம் அடர்ந்த வனப் பகுதியாகும். அந்தப் பகுதி, மக்கள் தொகை குறைவாக இருக்கக்கூடிய பகுதி. இருந்தபோதிலும், காலையிலும் மாலையிலும் பேருந்துகள் அந்த வழித்தடத்திலே இயக்கப்படுகின்றன. எனவே, அந்த வழித்தடத்தில் இயக்கப்படுகின்ற பேருந்துகளின் அடர்வுக்கு ஏற்ப ஆய்வு செய்து, அந்த வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்குவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி சார்ந்த பணிவான கோரிக்கை என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்றுவரை திருவாடனை தொகுதியிலே, தொண்டியிலோ, திருவாடனையிலோ ஒரு பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்று நான் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். அது அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திலே கொண்டு சென்று எனக்கு ஒரு சிறப்புப் பரிசாக, என் தொகுதிக்கு அறிவிக்க வேண்டுமென்று சிரம் தாழ்த்தி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலே ஒரு பணிமனை அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்துக் கொண்டேயிருக்கிறார். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர் கோருகின்ற இடத்தில் புதிய பணிமனை அமைத்துக்*

2019 ஜூலை 18]

கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) மாணவர் சேர்க்கை குறைவாக உள்ள பள்ளிகள் மூடப்பட்டு, அங்கே நூலகங்கள் இயங்குவதாக வந்துள்ள செய்தி மற்றும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கும் நூலகங்களை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் இன்றைக்கு zero hour–லே பேச வேண்டுமென்று வாய்ப்புக் கேட்டிருக்கிறார்கள். நான் முடிந்தவரை வாய்ப்புத் தருகிறேன். ஆனால், பேசுகிற உறுப்பினர்கள் சுருக்கமாக ஒரு நிமிடம் அல்லது ஒன்றரை நிமிடங்களில் முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அமைச்சர்கள் அதற்குத் தக்கபடி சுருக்கமாக பதில் சொல்வார்கள். நிறையபேர் வாய்ப்பு கேட்பதனால் நீங்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும். நீங்கள் நிறைய நேரம் எடுத்துக்கொண்டீர்களென்றால் நான் பேசுகிறவர்களைக் குறைக்க வேண்டியிருக்கும். எனவே, அனைவரும் இதற்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், நேற்று ஒரு பேட்டியிலே சொல்கிறபோது, தமிழகத்திலே மாணவர் சேர்க்கை எண்ணிக்கை குறைவாக இருக்கக்கூடிய 1,248 பள்ளிகள் மூடப்பட்டு அங்கே நூலகங்கள் இயங்கும் என்று தெரிவித்துள்ளதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. புதிய நூலகங்கள் வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், நடைமுறையிலே